முருகப்பெருமான் துணை

**மகான் ஞானச்சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**24.02.2024**, சனிக்கிழமை

1. ஒளி ஏற்றி ஞான வழிகாட்டி
ஓங்கார வேதம் அருளியே
அழியாமை தரவந்த ஞானியே
ஆறுமுக அரங்கமகா தவசியே
2. தவசியே உன் பெருமை கூறி
தக்கபடி சோபகிருது சால்திங்கள்
அவனியில் முன்னான்கு திகதி காரிவாரம்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 12 ம் நாள், 24.02.2024, சனிக்கிழமை)
அறிவிப்பேன் துல்லிய ஆசி
3. ஆசிதனை ஞானச்சித்தர் யானும்
அருளுவேன் உலகோர் ஞானவான் ஆக
வாசிவெல்லும் யோகம் தனை
வல்லமைபட அடைந்து உயர
4. உயரவே சூட்சும வழிமுறை
உயர் ஞானி அரங்கன் காட்ட
தயவுடன் வாழ்ந்து தானென்ற
தயவிலா அகந்தையை கடந்தாலே
5. கடந்தாலே பொறிபுலன்கள்
கட்டுண்டு உன்னை தேற்றி
இடரான தீவழிச் செல்லா
இணைக்கும் ஞானிகள் வழி தன்னில்
6. தன்னிலே அரங்கன் கரம்பட
தக்க தீட்சை முறை ஏற்று
அன்னதான சேவை வழி
அபயமென கலந்தால் போதும்
7. போதுமப்பா ஊழ்வினை அகல
புண்ணிய பலமதும் மிஞ்சி
ஆதரவாய் சுத்த சைவ நெறி
அனுபவிக்கும் நல் மாந்தனாக

8. ஆகவே நிலை உயர்ந்து
ஆறுமுகனார் தேடி அருளும்
மகான்களாக சக்தி பெருகி
மாதவ யோகப் பயிற்சி என்ற

9. என்ற மார்க்கம் கடந்து
இயல்பான அரங்கன் சீடரென
நன்றான அடையாளம் வழி
ஞானிகளாகத் தேர்வு செய்யப்பட்டு

10. செய்யப்பட்டு கலியுகத்திலும்
செகம் யுகம் மாற்றுகின்ற
அய்யமற முருகப் பெருமானின்
அனுகூலம் பெற்றவர்களாகி

11. ஆகியே ஞானத் தாலைமையை
அமைத்து உலக மாற்றம்
மகிழவே உலகினில் புரிவர்
மொழிந்திட்ட துல்லிய ஆசி முற்றே

—சுபம்—